22.11.24. தினமணி. பக்கம் - 4.

# தி.சு.அவினாசிலிங்கம் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சி



தி.சு.அவினாசிலிங்கம் நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சியில் பேசுகிறார் முன்னாள் துணைவேந்தர் பி.குழந்தைவேல்.

**கோவை, நவ. 21:** அவினாசிலிங்கம் கல்வி அறக்கட்டளை நிறுவனங்கள் சார்பில் தி.சு.அவினாசிலிங்கம் 33- ஆவது ஆண்டு நினைவு சொற்பொழிவு நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.

அவினாசிலிங்கம் மனையியல், மகளிர் உயர் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் துணைவேந்தர் வை.பாரதி ஹரிசங்கர் வரவேற்றார். கல்வி அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் தி.ச.க. மீனாட்சி சுந்தரம் தலைமை வகித்தார்.

இதில், சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பி.குழந்தைவேல் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று நினைவு சொற்பொழிவாற்றினார். அவர் பேசும்போது, தி.சு.அவினாலிங்கம் மகாத்மா காந்தியுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். காந்தியடிகள் இந்தியர்களிடையே அன்பையும், அமைதியையும் ஏற்படுத்த நினைத்தார். அதேபோலவே தி.சு.அவினாசிலிங்கம் கல்வி வழியாக மாணவர்களிடம் அறத்தை விதைக்க எண்ணியதாகக் கூறினார். கல்வி நிறுவனத்தின் பதிவாளர் இந்து நன்றி கூறினார்.

முன்னதாக பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ராமகிருஷ்ணர் ஆலயத்தில் இசைத் துறை சார்பில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. தொடர்ந்து, நினைவு மண்டபத்தில் உள்ள தி.சு.அவினாசிலிங்கத்தின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில், பேராசிரியர்கள், மாணவிகள் பலர் பங்கேற்றனர்.